डॉ. वी. तिरूपुगल, आई.ए.एस.
अपर सचिव
Dr. V. Thiruppugazh, IAS
Additional Secretary

सत्यमेव जयते

राष्ट्रीय आपदा प्रबंधन प्राधिकरण
National Disaster Management Authority
भारत सरकार
Government of India
एन.डी.एम.ए. भवन
ए-1, सफदरजंग एन्कलेव, नई दिल्ली-110 029
NDMA Bhawan
A-1, Safdarjung Enclave, New Delhi-110 029
Tel. : +91 11 26701747 Fax : +91 11 26701816
E-mail : jspp@ndma.gov.in

# வாழ்த்துரை

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்பார் பாரதி.

அந்த இனிய மொழி
பேச இனிது!
பாட இனிது!
கவி யாக்க இனிது!

அது எப்போதும் எவ்வகையினும் இனிதாக இருப்பதால் தானோ என்னவோ மரபாயினும் புதுக்கவியாயினும் பாடலாயினும் மனதைக் கவருகின்றது.

பட்டி மண்டபங்களில் இருப்பது போல மரபும் புதுக்கவிதையும் இரு அணிகளாக அணிகலன் சேர்க்கிறது அகிலத்தில்.

இத்தகைய பூர்வ பீடிகை எதற்கென்றால் என் முன்னே ஒரு கவிதைப்புத்தகம் பார்வைக்கு வந்தது. அதில் இப்படியான பல வகைகளில் மரபுக் கவிதைகள், புதுக்கவிதைகள், தமிழிசைப் பாடல்கள், வசனக் கவிதைகள் என பல்வேறு வண்ணங்களில் அது திகழ்கிறது.

அதை எழுதியவர் கவிஞர் திரு.நாகசுந்தரம் அவர்கள். பணி நிமித்தமாக எனது அலுவலகம் வரும் இவரை பலமுறை நேரில் நான் சந்தித்ததுண்டு. இனிய தமிழில் பேசும் இவரது கவிதைகளும் இனிமையே. தனது கவிதைத் தொகுப்பிற்கு ஓர் வாழ்த்துரை வழங்க என்னை கேட்டுக்கொண்டார்.

பட்டி மண்டபமாயினும் அலுவலகப் பணியாயினும் மரபு தவற நான் விழைந்ததில்லை. ஆனாலும் *"நீ நீயாக இரு"* என்று கூறும் ஜென் தத்துவம் போல இவரது கவிதைகள் பல மரபு தவறினும் அதிலுள்ள இனிமை, எளிமை என்னைக் கவர்ந்தது. அதனால் வாழ்த்துரை வழங்க இணைந்தேன்.

இவரது கவிதைகளில் கம்பன் உண்டு, பாரதி உண்டு, சுவடி காத்த தமிழ்ப் பாட்டன் உண்டு, வசனம் உண்டு, வாழ்த்து உண்டு, வடமொழியும் உண்டு, கலைகள் உண்டு.

தமிழ் கூறும் நல்லுலகு இவரது கவிதைகள், பாடல்கள் தொகுப்பைப் படித்து உண்டு சிறக்க வாழ்த்துகிறேன்.

மென்மேலும் அவர் பல்வேறு படைப்புகளைத் தந்து சிறப்புறுமாறு வாழ்த்துகிறேன்.

V. Thirh

**(வெ.திருப்புகழ்)**